20.03.2018ல் சிவபதமடைந்த வல்வெட்டித்துறை பிரபல்யங்களில் ஒருவரான அமரர் வயித்திலிங்கம்பிள்ளை வேலும்மயிலும் ஐயா அவர்களின் 31ம் நாள் நினைவலையை முன்னிட்டு மீள்பதிவு செய்யப்படுகிறது. – April-20118

**வல்வை சமூக சேவையாளர் இருவருக்கான பொது வரவேற்பு**

இப்படியானதொரு தலைப்பில் ஒரு பிரசுரம் 08.11.2012 காலையில் வல்வை சந்தியில் அமைந்திருக்கும் “கலைச்சோலை” புத்தகநிலையத்தில் நான் தினசரிப் பத்திரிகைகளை வாங்கப் போனபோது பத்திரிகைகளோடு சேர்ந்து எனக்கும் கிடைத்தது.

இதைக்கண்ணுற்றதும் கடந்தமாத “சிதம்பரக்கல்லூரி” பழைய மாணவர் சங்க நிர்வாக குழுக் கூட்டத்தில் (நானும் ஒரு உறுப்பினர்)இவ்வருடம் 11.11.2012இல் நடைபெறும் சிதம்பரக்கல்லூரி நிறுவுனர் தின விழாவுடன் ஒரு கௌரவிப்பு ஊர்வலமும் நடாத்தப்படவேண்டுமெனும் தீர்மானம் மேற்கொண்டமை எனக்கு ஞாபகம் வந்தது.

இருந்தும் இது வல்வைப்பொதுமக்களால் நடாத்தப்படப்போகிறது என்பதால் எனக்கும் பரமதிருப்தி. ஊர் கூடி ஒரு காரியத்தை செய்வதென்றால் அது எமது ஊரில் மட்டுமல்ல எந்தவொரு ஊர் எனினும் எவ்வளவு குறைநிறைகளையும் வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தும் என்பதை நான் என்னுள் யோசித்தபோதும், இதற்கெல்லாம் அஞ்சாது இந்த ஏற்பாட்டைச் செய்தவர்களுக்கு நான் மனமார நன்றி கூறிக்கொண்டேன். இப்பிரசுரத்தில் கௌரவிக்கப்பட உள்ளவர்களில் திரு.R.S சிவசுப்பிரமணியம் என்பவரைப்பற்றி நான் பலர் வாயிலாக ஆனால் சிறிதளவு கேள்விப்பட்டிருக்கிறேன். எனினும் எனது மானசீகக் குருவாகவும் நடமாடும் காந்தியாகவும் விளங்கும் திரு.வைத்திலிங்கம்பிள்ளை.வேலும்மயிலும் ஐயாவினுடைய பெயரும் அங்கு காணப்பட்டமை என்னை பரவசமாக்கியதுடன் வல்வை மக்களின் நன்றி மறவாமையை நினைத்து நெகிழ்ந்து போனேன்.

10.11.2012 பி.ப6.00 மணியளவில் திரு.M.Kசிவாஜிலிங்கம்(வல்வை நகரசபை உறுப்பினர்),குட்டிமணி அண்ணா என அறியப்படும் பேராசிரியர்.திரு.சபா.இராஜேந்திரா, பொன்.சிவஞானசுந்தரம்(செயலாளர்- வல்வை சன சமூக சேவா நிலையம்) போன்றோர் குருதிக்கொடைவள்ளல் திரு.சக்திவேல் அவர்களின் முச்சக்கரவண்டியில் என்வீட்டுக்கு வந்து நாளை காலை 7.00 மணிக்கு குட்டிமணி அண்ணா வீட்டில் விருந்தினர்களுக்கு எமது ஊர் காலை உணவு வழங்கி வைபவத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும், முடிந்தளவு விளையாட்டுக் கழகங்கள், படிப்பகங்கள் என்பன மூலம் வல்வை மக்களுக்கு இது பற்றி தெரியப்படுத்தியதாகவும் என்னையும் காலை உணவில் கலந்து சிறப்புவிருந்தினர்களையும் ஏனையோரையும் ஊக்குவிக்குமாறு கோரிச் சென்றனர்.

மறுநாள் அதிகாலை 7.00 மணிக்கு காலை உணவு மூலம் எல்லோரையும் ஒன்றுகூடச் செய்து 8.00 மணிக்கு விழாவை ஆரம்பிப்பதற்கு அவர்கள் கையாண்ட யுக்தி, அவர்கள் ஒழுங்குபடுத்துதலிலும், நேரந்தவறாமையிலும் கொண்ட கரிசனையையும் அவர்களின் ஆளுமையையும் குறித்து நிற்கின்றன. இப்பண்பும் திறமையும் எல்லோரும் கைக்கொள்ளவேண்டியதொன்றாகும்.

“கண்டவற்றை நாளும் கனவில் கலங்கிடும் திண்டலறுக்கென்னே செயல்” அதாவது பகலிலே நிகழும் நிகழ்வுகள் பற்றி இரவு முழுவதும் கனவிலே கண்டு கலங்கும் மானிடப்பிறவிக்கென்று என்ன சுயவல்லமை உண்டென்று நான் எங்கோ படித்த ஞாபகம். அதற்கிணங்க அன்று இரவு முழுவதும் எனது சிந்தையிலே பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தேன் வாழ்ந்தேன் இறந்தேன் என்றில்லாமல் தான் இவ்வுலகில் வாழ்ந்ததற்கு அடையாளமாக ஏதாவது ஒருசில தடயங்களை விட்டுச்செல்லவேண்டும். “Charity begins at home” என ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதாவது புண்ணியம் முதலில் தனது வீட்டில் ஆரம்பிக்கப்படவேண்டும். எமது

ஊரில் ஒரு வாய்மொழிப் பழமொழியுண்டு " ஆத்தை பிச்சை எடுக்குது பிள்ளை கந்தவனக்கடவையில் அமுது கொடுக்குது" என்று, அதுபோல சாதனைகளை நாம் எமது வீடு, எமது ஊர், எமது நாடு என்ற படிமுறையில் செய்யவேண்டும். அந்தவகையில் இச்சிறியேனின் சிந்தனையில் வல்வெட்டித்துறை முன்னோர்களும் சமகால வல்லவர்களும் படைத்த பல சாதனைகளும் வீரதீரச் செயல்களும் உருண்டோடின. அவற்றுள் சில.............

1. வல்வெட்டித்துறைக்கு முத்திரையும் புகழும் படைத்த - 1937 இல் அமெரிக்காவுக்கான பயணத்தை ஆரம்பித்த "அன்னபூரணி"யின் வரலாறு.
2. 1982இல் திரு.பூ.க.முத்துக்குமாரசாமி மற்றும் வயித்திலிங்கம்பிள்ளை என்போரால் எழுதப்பட்ட "வல்வெட்டித்துறை ஊரின்னிசை"என்னும் வரலாற்று நூலில் பதிவுசெய்யப்பட்ட 19ம் நூற்றாண்டில் வல்வையில் தொழில்புரிந்த 113 கப்பல்கள் பற்றிய விபரங்களில் முதலாளிமார்கள், விசேடமாக பெண்முதலாளிமார்கள், தண்டயல்கள் என்போரது சாதனைகள்.
3. இவர்கள் வெளிநாடுகளில் இக் கப்பல்கள் மூலம் எவ்வாறு தொழில்புரிந்தார்கள், சர்வதேச தரத்தினாலான கப்பல்களை எல்லாம் எவ்வாறு இங்கு உள்ளூர் மரங்களைக்கொண்டு சிறப்பாகக் கட்டுவித்து சுதந்திரமாக பாரெல்லாம் பவனி வந்தார்கள் என்ற விடயங்கள், எங்கெல்லாம் வணிகம் செய்தார்களோ அந்தந்த வெளிநாடுகளில் கோவில்கள் கட்டி சைவசமயத்தை வளர்த்தனர் என்பன.
4. வல்லிபுரம் முருகுப்பிள்ளை என்ற ஆதிகோவிலடியில் வாழ்ந்தவரின் தலைமையில் அவ்வூர் மக்கள் 1898 இல் வல்வை சிவன் ஆலயத்திற்குரிய "சூரபத்மன்" வாகனம் கொண்டு வந்தனர் என்பதும் அவர்களே பின்னர் முத்துமாரி அம்மன் கோயிலுக்குரிய சூரபத்மனையும் கொண்டு வந்தனர் என்பதும்.
5. திரு.பா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுதிய "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்னும் நூலில் காணப்படுகின்ற
    a. கடலில் மூழ்கிய கப்பலை மீட்டெடுத்த வல்வை மகான்
    b. தென் இலங்கை அரசியல்வாதிகளான இடதுசாரித் தலைவர்கள் N.M.பெரேரோ, கொல்வின் ,R.D. சில்வா போன்றோரை கடல்மார்க்கமாக இந்தியா கொண்டுசென்று பாதுகாத்த எம்மவர்
    c. 1980ஆம் ஆண்டு கடலில் 36 வயதுடைய து.யோகரத்தினராசா ஏறக்குறைய 60 மணித்தியாலங்கள் மிதந்தமை
    d. 1958இல் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தினால் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது எமது அரசியல் தலைவர் திரு.A.அமிர்தலிங்கம் மங்கையற்கரசி தம்பதிகளை கடல் மார்க்கமாக மட்டக்களப்பிற்கு கொண்டுசென்ற சாதனையாளர்கள்.
    e. 1974இல் விடுதலை வேட்கை கொண்ட வல்வை மைந்தன் சின்னரத்தம் ஞானலிங்கம் பயங்கரவாத முத்திரையுடன் தேடப்பட்டு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ஜீப்வண்டியில் யாழ் நோக்கி செல்கையில் சினிமாப்பாணியில் சாரதியையும் ஏனையோரையும் தாக்கி ஜீப் வண்டியையும் புரட்டி தப்பிச்சென்றமை.
    f. 1961 இல் ஆதிகோவிலடி மண்ணில் முதல் முதலாக கால் வைத்த இராணுவத்தினரின் அதட்டலால் ஆத்திரமுற்று அவர்களின் துப்பாக்கிகளை பறித்து கடலில் வீசியதுடன் அகோரமான தாக்குதல்களையும் மேற்கொண்ட ஆதிகோவிலடி மக்களின்(பெண்கள் உட்பட) உணர்ச்சிகள் பற்றியமை.
    g. உலகமகா யுத்தம் நடைபெற்ற காலத்தில் தென்னிலங்கை மக்களுக்கு அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் தமது வத்தைகள் மூலம் இந்தியாவிலிருந்து அரிசியைக் கொணர்ந்து தென்பகுதி மக்களின் பசி தீர்த்த எம்மவரின் மனிதாபிமானப் பண்புகள்

h. தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது சகல யாழ்ப்பாண மக்களுக்கும் மங்கள காரியங்களுக்காக பட்டுப்புடவை பட்டுவேட்டிகள் என்பவற்றை இந்தியாவிலிருந்து தருவித்து வல்வெட்டித்துறையை ஒரு கேந்திர வியாபாரதளமாக்கிய எமது முன்னோர்களின் சாதனைகளும் இதற்காக அவர்கள் கடலிலும், கரையிலும் ஆமி,நேவி,பொலிஸ்,கஸ்டம்ஸ் என பல தரப்பட்டவர்களுடனும் நடாத்திய போராட்டங்கள்.

i. அறுபது(1960) எழுபதுகளில்(1970) புரட்சித்தலைவன் M.G.R இன் படத்தைப் பார்ப்பதற்காகவென்று அரசபடைகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இந்தியா சென்றுவரும் எமது அக்கால இளைஞர்களின் துணிச்சல்.

j. றெயில் தண்டவாளத்தில் காரைச்செலுத்தி பொலிசாரையும் சுங்க இலாகாவினரையும் ஏமாற்றி சாதனை புரிந்த 'ஹிட்லர் கந்தசாமியின் வீரதீரச் செயல்கள்

k. சாண்டோ சங்கரதாசின் பிரசித்திபெற்ற மெய்வன்மைகள்.

l. பயில்வான் சோமுவின்(சட்டத்தரணி காண்டீபன் மற்றும் லெச்சி என்போரது தந்தை) சண்டித்தனம் அடக்கும் சாதனைகள்.

m. அரச ஆயுதப் படைகளுக்கு எதிராக நேருக்கு நேர் ஆயுதமேந்தி மோதிக்கொண்ட வல்வை மைந்தர்களின் அக்காலத்துணிச்சல்கள்.

n. அந்தநேரத்தில் சாத்வீகமாக அரசியல்போராட்டம் நடாத்தவென எதிரும் புதிருமான கொள்கைகளையுடைய பலதரப்பட்ட தமிழ் மக்களின் கட்சிகளை ஒன்றிணைத்து "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்னும் அமைப்பை உருவாக்கிய ச.ஞானமூர்த்தி அப்பாவின் அரசியல் சாணக்கியம்.

o. 1954இல் வல்வை ரேவடிக் கடலிலிருந்து 32 மைல் தூரத்தை பாக்கு நீரிணை ஊடாக நீந்திச்சென்று சாதனைபடைத்த நீச்சல்வீரன் மு.நவரத்தினசாமியின் விடாமுயற்சியும் அதனால் பிரிட்டிஸ் மகாராணியின் சிறப்பு விருதைப்பெற்று வல்வை மண்ணுக்கு புகழைத்தேடித்தந்த வரலாறும். இவரைத்தொடர்ந்து "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்ற முதுமொழிக்கேற்ப இவரின் மகன் பாலச்சந்திரன் 1983ம் ஆண்டு தனது 16வது வயதில் ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கும் காரைநகர் துறைமுகத்திற்குமிடையிலுள்ள 1500அடி அகலமான கடல் நீரோட்டத்தை இரு கைகளையும் இருகால்களையும் கட்டியவண்ணம் குறுக்கறுத்து நீந்திச்சாதனைபடைத்தமை.

p. 1943இல் வல்வெட்டித்துறையில் பிறந்து 1963இல் வல்வெட்டித்துறையிலிருந்து கோடியாக்கரைக்கு பாக்குநீரிணையூடாக நீந்திக் கடந்து முதல்சாதனையை ஆரம்பித்து 1984ம்ஆண்டு ஆங்கிலக் கால்வாயைக்கடக்க பயிற்சியிலீடுபட்டபோது வீரமரணமெய்திய ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் ஒரு சட்டத்தரணியாக இருந்தபோதும் 10க்கு மேற்பட்ட சாதனைகளைப்புரிந்து அதில் 07 சாதனைகளை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்ததும் மட்டுமல்லாது இலங்கையர் ஒருவர் முதன்முதலாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தார் என்னும் உயரிய ஆற்றலைக்கொண்டு தாய் நாட்டிற்கே பெருமைதேடித் தந்தவரின் சாதனை.

ழ. வல்வை பூளூஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் வல்வை சிதம்பரக் கல்லூரி விளையாட்டு வீரர்கள் அகில இலங்கை ரீதியில் படைத்த் சாதனைகள்.

இவ்வாறு எண்ணக்கருக்கள் நீண்டு கொண்டே போகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மகுடமாக தமிழீழப் போராட்டத்தை ஆரம்பித்து நடாத்தி உலகம் வியக்கும் உன்னத சக்தியாக விளங்கிய மறவர்கள் பலரைத் தோற்றுவித்த உலகப்புகழ்பூத்த உன்னத தலைவர் வேலுப்பிள்ளை பிராபாகரன் கதையுடனும் முள்ளிவாய்க்கால் முடிவுடனும் என் சிந்தனைச் சிதறல்கள் தற்காலிகமாக ஓய்வெடுத்துக் கொள்கின்றன.

இந்த ரீதியில் 11.11.2012இல் பொதுமக்களால் வரவேற்பளித்து கௌரவிக்கப்பட்ட இருவர்களினதும் பின்னணி என்ன? அவர்கள் வல்வை மக்களுக்கு குறிப்பாகவும் ஏனைய தமிழ் மக்களுக்கு பொதுவாகவும் எவ்வாறு சேவை ஆற்றினார்கள் அதனால் வல்வை மண்ணிற்கு எவ்வாறு பொதுச் சேவை செய்தார்கள்? என்ற விடயங்களை அறிந்து கொள்வதற்காக அவ்விரு பெரியவர்களுடனும் தொலைபேசி மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள தீர்மானித்து முதலில் திரு.வேலும்மயிலும் ஐயாவுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் தொகுப்பை வாசகர்கள் அறியும் பொருட்டு கீழே தருகிறேன்.

**திரு.வேலும்மயிலும் ஐயாவுடனான முதல் சந்திப்பு**

ஆதிகோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் (1964/65) G.C.E O/L படித்துக் கொண்டிருக்கும் பொழுது எனது தாயார் திருமதி நடராஜா வள்ளியம்மாள் எமது ஊருக்குரிய கிராம சேவகர் ஒருவரிடம் கடிதம் ஒன்று பெற்று அதை பருத்தித்துறை உதவி அரச அதிபர் பணிமனையில் சமர்ப்பிக்க வேண்டி இருந்ததால் குறித்த கிராம சேவகரிடம் சென்று அக்காரியம் நடைபெறாமையால் அதுபற்றிய கவலையுடன் என்னிடம் கூறி AGA வேலும்மயிலும் ஐயாவை சந்தித்து உரிய கடிதத்தை பெற்றுத் தருமாறு என்னை வேண்டிக் கொண்டார். அதற்கமைய அவர் வசித்த வல்வை ஊறணி ஆஸ்பத்திரிக்கு பின்னால் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு காலை 7 மணி போல சென்றேன். (அக்காலப் பகுதியில் அவர் எங்கே என்ன பதவியை வகித்தார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.)

அப்பொழுது அவர் பல்துலக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்று எமது பிரச்சினைகளை தெரிந்து கொண்டார். நான் விடயத்தைக் கூறியதும் என்னை அமரும்படி கூறி உள்ளே சென்றுவிட்டார். நானோ பாடசாலைக்கு செல்வதற்கு நேரம் போய்க்கொண்டிருந்தமையால் பதற்றப்பட்டுக் கொண்டிருந்தேன். என்னே ஆச்சரியம்! போன ஐயா அவர்கள் அதே கதியில் கையில் ஒரு பெட்டியுடன் (Type Writer)திரும்பி வந்து அப்பெட்டியைத் திறந்து ஏதோ அச்சுப்பதிவு செய்தார். அத்துடன் தனது அருகிலிருந்த காரியாலயத்திற்கு கொண்டு செல்லும் Office bag (பை) ஐ திறந்து ஒரு Rubber Stamp ஐயும் எடுத்து அதில் பதித்து தனது ஒப்பத்தையும் இட்டு அக்கடிதத்தை என்னிடம் தந்து எனது தாயாரிடம் ஒப்படைக்கும்படியும் மீண்டும் குறித்த கிராம சேவகரிடம் போக வேண்டிய அவசியமில்லை எனவும் குறித்த கடிதத்தை பருத்தித்துறை உதவி அரச அதிபர் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கூறி என்னையும் நன்றாகப் படிக்க வேண்டும் உன்னைப் பெற்றவர்களுக்கும், ஆதிகோவிலடிக்கும் பெருமை தேடித்தரவேண்டும் என வாழ்த்தி அனுப்பினார்.

இவையாவும் 10 நிமிடத்திற்குள் நடந்து முடிந்த சம்பவங்கள் ஆகும். இது என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாக என் மனதில் ஆழப்பதிந்து திரு.வேலும்மயிலும் ஐயாவைப் போல நானும் பொதுமக்களுக்கு உதவிபுரிய வேண்டும் எனும் திடசங்கற்பத்தை எனக்குள் உருவாக்கியது. வீடு சென்று அம்மாவிடம் கடிதத்தை கொடுத்து நடந்தவற்றையும் கூறினேன். அம்மாவும் அந்த மகானைப் போல எதிர்காலத்தில் நீயும் உருவாகி பொதுமக்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்

என்று தனது ஆசியுடன் கூறி வைத்தார். அன்றைய தினத்திலிருந்து எனது Role Model ஆக வேலும்மயிலும் ஐயாவை மனதிலிருத்தி இன்றுவரை எனது சேவைகளை பொதுமக்களுக்கு ஆற்றி வருவதற்கு காரணம் இந்தப் பெரியார் திரு.வேலும்மயிலும் ஐயா அவர்களே.

கேள்வி:- திரு.வேலும்மயிலும் ஐயா அவர்களே உங்களைப்பற்றிய சில தகவல்களை வல்வை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டிய கடப்பாடு எனக்கிருப்பதால் தயவு செய்து முதலில் உங்கள் தோற்றம் பற்றியும் தாய் தந்தையர் மற்றும் குடும்பத்தினர் பற்றியும் கூற முடியுமா?

பதில்: சந்தோசம் , என்னையும் அண்ணா R.Sஐயும் 11.11.2012இல் கௌரவித்த பொது மக்களுக்கு முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அக்கௌரவத்திற்கு நான் தகுதியுடையவனோ தெரியாது. இருந்தும் என்னை அழைத்தவர்களை கௌரவிக்கவேண்டும் எனும் பண்பிற்கமையவே நான் யாழ் நகரிலிருந்து எனது பாரியாருடன் அங்கு வருகை தந்தேன். இது எமக்கு சுமத்தப்பட்ட அன்புக்கடமை என்றே கருதுகிறோம்.

ஆம் எனது தந்தையின் பெயர் செல்லச்சாமி வைத்திலிங்கம்பிள்ளை, தாயார் சின்னத்தம்பி மகள் தெய்வநாயகி அம்மா. நாங்கள் ஏழு பிள்ளைகள். ஒரு சகோதரர் சோமசேகரம்(Auditor -Exmination Department)இல் கணக்காய்வாளராகப் பணிபுரிந்தவர். ஒரு தம்பி பல்வைத்திய நிபுணர் Dr.திருவடிவேல், ஒரு அக்கா மகாலஷ்மி, ஏனைய மூன்று சகோதரர்கள் முறையே சந்திரசேகரம்(France),இராயலஷ்மி மற்றும் ஞானாம்பிகை(France)

கேள்வி: உங்கள் தந்தையார் காலத்தில் அதாவது உலக மகாயுத்த காலத்திலே வாழ்ந்த எம்மவர் பற்றி அறிய ஆவலாக உள்ளது. அது பற்றி …….?

பதில்: எனது தந்தையாரின் கல்வித்தகமை English School Leaving Certificate(ES.L.C) ஆங்கிலப் பாடசாலையில் கல்விகற்றுத் தேறியமைக்கான சான்றிதழ். அப்போ கல்வி முழுக்க ஆங்கில மொழியிலேயே (English medium) நடாத்தப்பட்டன. இவரது தராதரம் தற்போதைய G.C.E A/L க்குச் சமமானது எனக் கூறலாம். அக்காலத்தில் இது பெரிய படிப்பு இத்தகுதியுடன் இவர் மலேசியா சென்று Malasiyan Railway Department இல் Station Master ஆக அதாவது புகையிரத நிலைய பொறுப்பதிகாரியாக கடமைபுரிந்தார். உலக மகா யுத்தத்தில் இலங்கைக்கு வந்துபோக எண்ணிய இவர் மீண்டும் அங்கு செல்லவில்லை. இதனால் இவர்ஒரு மலாய பென்சனராக இருந்தார். மலேசியாவுக்கு மீண்டும் போகமுடியாமையால் வல்வெட்டித்துறை நகரசபையில் வருமானவரி ஆலோசகராக (Income Tax Advisor and Revenue officer) கடமைபுரிந்து எங்களை எல்லாம் அம்மாவுடன் சேர்ந்து வளர்த்து ஆளாக்கினார்.

கேள்வி: உங்களுடைய பிறந்த திகதியைக் கூறமுடியுமா?

பதில்: ஆம். அது 24.08.1936

கேள்வி: நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள்?

பதில்: ஆரம்பக்கல்வி வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை பின்னர் A/L வரை சிதம்பரக் கல்லூரி

கேள்வி: நீங்கள் எத்தனை வயதில் அரச உத்தியோகத்தில் சேர்ந்தீர்கள். அதன் படிமுறை வளர்ச்சி எப்படி இருந்தது. அதாவது உங்களின் Career Development பற்றி அறிய ஆவலாக உள்ளேன்.

பதில்: எனது ஞாபகப்படி பின்வருவனவற்றை என்னால் கூற முடியும். நான் எனது 19வது வயதில் வேலையில் இணைந்தேன்.

| திகதி<br>Date | சேவையும் தகுதியும்<br>Title of Jobs and Service record |
|---|---|
| 25/07/1955 Government Clerical Service - | அரச லிகிதர் சேவை |
| 01/10/1959 Passed class II exam in 1st shy - | அரசசேவை தரம்II பரிட்சையில் ஒரே முறையில் சித்தி |
| 01/06/1976 Passed S.L.A.S Exam - | சித்தி -இலங்கை நிர்வாக சேவைப் பட்டப்படிப்பு (Srilanka Administrative Service) |
| 01/06/1986 Passed Class I exam 1st shy - | அரசசேவை தரம்I பரிட்சையில் ஒரே முறையில் சித்தி |
| 24/08/1996 Retiring Date – (but not allowed to ) - | 60வது வயதில் ஓய்வுநிலை ஆனால் அனுமதி கிடைக்காமையால் மேலும் 61/2 வருடங்கள் சேவையில் நீடிப்பு. |

கேள்வி: எப்படி நீங்கள் இவற்றையெல்லாம் திகதி வாரியாக ஞாபகம் வைத்துள்ளீர்கள்?

பதில்: இக்காலத்தைப்போல அப்போ கணனி யுகம் இல்லையே. எல்லாமே அடிமனதில் பதிந்து விடுகின்றன. அதாவது கணனி மொழியில் கூறுவதானால் Hard Disk இல் பதியப்பட்டுள்ளன என நினைக்கிறேன்.

கேள்வி: அக்காலத்தில் வாய்பாடு மனனம் செய்வது என்பது இப்போது கல்குலேட்டரால்(Calculator) ஈடு செய்யப்பட்டுள்ள பரிதாப நிலைபோலுள்ளது என்பதை சாகசமாக சொல்கிறீர்கள் போலும்.

உங்கள் ஆளமை விருத்தியை தொழில்சார் கல்வி உயர் தகமைகள் மூலம் நிரூபித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளீர்கள். அதாவது A.L தகுதியுடன் சாதாரண லிகிதர் வேலையில் சேர்ந்து ClassII, Class I மற்றும் S.L.A.S தொழில்சார் கல்விகளில் சித்தியெய்தி அரச அதிபர் வரையான பல பதவிகளை வகித்திருக்கிறீர்கள்.

இப்பதவிகள் எவ்வாறானவை அவைமூலம் சமூகத்திற்கு எவ்வாறு உதவியுள்ளீர்கள் என்பது பற்றி அறிய ஆர்வமாக உள்ளோம். எனவே தங்கள் சேவைக்காலம், வேலை செய்த இடங்கள், வகித்த பதவிகள் என்பன பற்றி எமது மக்களுக்கு அறியத்தர இயலுமா?

பதில்: முதல் 06 வருடங்களும் நீதிவான் நிதிமன்றத்தில் (Magistrate Court) லிகிதர் தரம்IIIஇலும், தரம்IIஇலும் கடமை புரிந்தேன், பின்னர் 1961 ம் ஆண்டிலிருந்து 1966 வரையான 06 வருடங்கள் இரத்தினபுரி மாவட்ட நிதிமன்றில் (District Courts) வேலை செய்தேன்.இக்காலப்பகுதியில் தட்டச்சாளராகவும் லிகிதராகவும் பணி புரிந்தேன். இக்காலப்பகுதியில்தான் ClassII Examஇல் சித்தியடைந்தேன்.

1967 -1970 வரையான 03 வருடங்களில் பருத்தித்தறை நீதவான் நீதிமன்றில் (Magistrate Court)ல் தொலுக்குமதலி அதாவது கோட்முதலியார் எனச் சொல்லலாம் (Interpritor-மொழிபெயர்ப்பாளர்) எனும் பதவியிலிருந்தேன். அக்காலத்தில் வழக்குகளெல்லாம் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்பட்டன.

1970-1976 வரை நம்பிக்கைப்பொறுப்பாளர் திணைக்களத்தில் (Public Trustees Department)ல் கடமையாற்றினேன்.

1976ல் S.L.A.S Exam இல் சித்தியடைந்தமையால் உதவி அரச அதிபராக (A.G.A) இரண்டு வருடங்கள் அதாவது 1978 வரை கரவெட்டிப் பிரதேசப் பகுதியில் வேலை செய்தேன்.

1978 – 1990 வரையான 12 வருட நீண்டகாலப் பகுதியில் பருத்தித்துறை உதவி அரச அதிபராக கடமையாற்றினேன். இக்காலப்பகுதி தமிழ் மக்களின் போராட்ட ஆரம்பகாலத்தையும் நடுப்பகுதியையும் உள்ளடக்கிய காலமாகவும் 1987ல் ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின் காலமாகவும் இருந்தது. இக்காலப்பகுதியில் சட்டவரம்புக்குட்பட்ட வரையிலும் தற்துணிவிலும் எமது மக்களுக்கு என்னாலான உதவிகளை அதாவது உணவு,இடப்பெயர்வு,புலம்பெயர்வுகளுக்கான ஆவணங்களை உறுதிப்படுத்தல் போன்ற உதவிகளைச் செய்ய முடிந்தது.

Oct 1990லிருந்து 01.06 1993 வரையான 21/2 வருடகாலமாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளராக(Secretary of the Commessioner –North, East) பணிபுரிந்தேன். இதைத் தொடர்ந்து March 93இலிருந்து Jan2002 வரையான ஏறக்குறைய ஒன்பது வருடகாலமாக இரு பதவிகளைக் கொண்ட மிகவும் பொறுப்பாக சேவையாற்றவேண்டியேற்பட்டது. இக்காலப்பகுதியின் பெரும்பகுதி வடக்கும் தெற்கும் துண்டிக்கப்பட்டு போக்குவரத்து,உணவு,அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், போன்றவற்றில் எமது மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்த காலமாக இருந்தமையை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த இரு பொறுப்புக்களாவன

பிரதேச செயலர் (Divisional Secretary) - திருகோணமலைப் பட்டினமும் சூழலும்.

அத்தியாவசிய சேவைகள் (Duputy Commissioner –Eassential Service) - பிரதி ஆணையாளர்

இதனைத்தொடர்ந்து April 2002 லிருந்து எனது சேவையை நோர்வே நாட்டை பின்புலமாக கொண்ட Srilanka Monitoring Mission (S.L.M.M) என்னும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பெற்றுக்கொண்டது. இதில் நான் ஒரு ஆலோசகராகவும் உறுப்பினராகவும் 2009 வரை கடமையாற்றினேன். இதன் பின் இக்குழுவின் பணி நீடிக்கப்படவில்லை. எனது சேவையை மதித்து கௌரவிக்கும் பொருட்டு நோர்வே அரசாங்கம் எமது குடும்பத்தினருக்கு நோர்வே குடியுரிமை தந்து அங்கு வரவழைக்க வேண்டுகோள் விடுத்தது. நான் கௌரவத்துடன் அதை ஏற்க மறுத்துவிட்டேன்.

நன்றி வேலும் மயிலும் ஐயா அவர்களே. நீண்டதொரு பாதைக்கு இட்டுச்சென்றுள்ளீர்கள். எமது சிறிய வல்வெட்டித்துறையில் ஆரம்பித்த உங்கள் வாழ்வில் எத்தனையோ சேவைகளை மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் ஜாதி,மதம்,இனம் பாராது ஆற்றி முடிந்தளவுக்கு எல்லோருக்கும் உதவியுள்ளீர்கள். நிச்சயமாக உங்கள் பதவிகளை நீங்கள் சிறந்த பண்பாளராக பொது மக்களினதும் அல்லல்படுபவர்களினதும் போரினால் பாதிக்கப்பட்டவர்களினதும் நன்மைக்கே பயன்படுத்தியுள்ளீர்கள் என்பது பல தரப்பட்ட மக்களிடமிருந்தும் நாம் அறியக்கூடியதாக உள்ளது.

‘‘பதவி வரும் போது பணிவும் வர வேண்டும்’’ என்பது நான் M.G.R இன் சினிமாப்படத்தில் கேட்ட வரிகள் அந்தப் பண்பை உங்களிடம் பலர் கண்டுள்ளார்கள்.தனிப்பட்ட முறையில் அந்த அனுபவத்தை எனது பள்ளிப் பருவத்தில் நானும் உங்களிடம் கண்டுள்ளேன். உங்களின் சேவையை வல்வெட்டித்துறை மக்களாகிய நாம் மட்டுமல்ல பருத்தித்துறைப் பிரதேசம்,திருமலைப் பிரதேசம் என்பன மட்டுமல்லாமல் முழு இலங்கையுமே பெற்றிருக்கிறது. அது மட்டுமா! கடல்கடந்து உங்களின் திறமை,ஆளுமை, உயரிய பண்புகள் என்பன பரவியுள்ளதற்கு எடுத்துக்காட்டுத்தான் நோர்வே அரசாங்கம் உங்களை இனங்கண்டு தனது அமைப்பில் தங்களை உள்வாங்கியமை.

உங்களுக்கு 24 மணிநேரமும் கந்தோர் நேரம்தான். வீடு,வீதி,பயணம் செய்யும் வாகனம் எல்லாமே உங்களுக்கு காரியாலயம்தான். எப்பொழுதுமே தங்களது கந்தோர் பையிலே உங்கள் பதவி இலச்சனையை (Official Rubber Stamp) கொண்டு செல்வது உங்கள் வழக்கமாக இருந்தது என பலர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கேள்வி: நீங்கள் எங்களுக்கு அதாவது தற்போது பதவிகளில் இருப்பவர்களுக்கும் மாணவ சமுதாயத்திற்கும் பொது மக்களுக்கும் சொல்ல விரும்பும் செய்தியை சுருங்கக் கூறுங்கள்.

பதில் : எனது குணவியல்பு எப்படி என நான் கூற முடியாது. அது மற்றவர்களின் கணிப்புக்குரியது. ஊர் மக்கள் என்னையும் இப்பெருமெடுப்பில் கொரவிக்குமளவிற்கு நான் ஏதாவது செய்திருந்தால் அது நானும் என்னை ஈன்றவர்களும் செய்த பாக்கியமே.

இருந்தும் நான் என் வாழ்நாளில் கடைப்பிடித்த,பிடித்து வருகின்ற சில பண்புகளை இங்கே கூற விரும்புகிறேன். அதை ஏனையவர்களிடமும் எதிர்பார்க்கிறேன்.

**எப்பதவி வகித்தாலும் மிக எளிமையாக இருத்தல்.**

**மக்களால் இலகுவாக அணுகப்படக்கூடியவராக இருத்தல்.**

**எந்த நேரத்திலும், எங்கும் நேரம் காலம் பாராது "மக்கள் சேவையே மகேசன் சேவை" என எண்ணி பொதுமக்களுக்கு உதவிசெய்யும் மனப் பக்குவத்துடன் பணிபுரிதல்.**

**அன்றே அந்த நேரத்திலேயே செய்து முடிக்கக்கூடிய காரியங்களை உடனுக்குடன் காலத்தை பிற்போடாமல் முடித்துவிடும் கொள்கையுடன் சேவை செய்தல்.**

**எக்காரணம் கொண்டும் ஒரு பொதுமகனை தேவையின்றி மீண்டும் காரியாலயத்திற்கு அழைக்காதிருத்தல்.**

**தேவையற்ற ஆவணங்களை கோராமலிருத்தல்.**

**அதிகாரிகள் முடிந்தளவில் தாங்களே முடிவெடுத்து தமது அதிகார வரம்புக்குட்பட்ட வேலைகளை செய்தல்.**

கேள்வி: உங்களின் வெற்றியின் இரகசியம் என்னவென்பதையும் எப்படி நீங்கள் மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளீர்கள் என்பதை நீங்கள் நெடியகாட்டில் ஊறணிக்குப் பின்னால் வசித்துவந்த வீட்டின் ஒழுங்கைக்கு மக்கள் AGA ஒழுங்கை எனப்பெயர் வைத்ததிலிருந்து அறியமுடிகிறது. நீங்கள் வேறு என்ன கூறவிரும்புகிறீர்கள்.

பதில் : எனது இவ்வளவு காரியங்களையும் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைத்தந்த கடவுளுக்கு அடுத்தபடியாக எனது மனைவியையே நான் முதன்மைப்படுத்துவேன். அவரின் பொறுமையும் நேரந்தவறாமையும் எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் இன்றும் செய்து வருகின்ற அவவின் அந்தப் பண்புதான் , அந்தப் பின்னணிதான் நான் வல்வை மக்களால் கௌரவிக்கப்படுவதற்கு மிக மிக முக்கிய காரணம். எனவே எல்லாப் புகழும் இறைவனுக்கே சேரட்டும்.

கேள்வி: இறுதியாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?

இந்த வல்வை மண்ணில் எமது முன்னோடிகள் எமது மக்களுக்காக எவ்வளவோ தியாகம் செய்துள்ளனர். அவர்களை நாம் இனங்காணத் தவறியிருக்கலாம். எமது போராட்ட வரலாற்றில் எத்தனையோ பெற்றார் தமது பிள்ளைகளை இழந்துள்ளனர். நாடு கடந்து வாழும் வல்வெட்டித்துறை மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த மண்ணிற்காக எவ்வளவோ தியாகங்களை செய்து வருகின்றனர். ஆழிக்குமரன் ஆனந்தன் போன்றவர்கள் எத்தனை கின்னஸ் சாதனைகள்

படைத்துள்ளனர். இப்படியாக மதிக்கப்படவேண்டிய கௌரவிக்கப்படவேண்டியவர்கள் பலர் இருக்கும்போது என்னையும் R.S அண்ணனையும் இப்போ கௌரவித்தமைக்காக நன்றிக்கடன் தெரிவித்துக்கொள்வதுடன் வல்வை மக்கள் தமது வரலாற்றுக்கடமைகளை மறக்காது வளம் மிக்க சமூதாயமாக வாழ வாழ்த்துகிறேன்.

**ஆக்கம்-**
ந.சிவரட்ணம் (வல்வை ஆதிகோவிலடி ஜெயம்)
ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர்-இலங்கை வங்கி